சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம்

இந்திய உயர் ஸ்தானிகராலயம், கொழும்பு

ஊடக அறிக்கை

**இந்தியாவில் அரங்க மற்றும் கட்புலக் கலைகள்**

**கற்கைகளுக்கான புலமைப் பரிசில்கள்**

**கல்வி ஆண்டு (2020-2021)**

**இந்திய உயர் ஸ்தானிகராலயம் அரங்க மற்றும் கட்புலக் கலைகள் சார்ந்த பட்டப் படிப்புக்களுக்கான புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பங்களை கோரியுள்ளது.**

1. இந்திய வெளிவிவகார அமைச்சின் கலாசார உறவுகளுக்கான இந்திய சபையினால் (ICCR) பிரசித்தமான இந்திய பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்கள்/குருகுலங்களில் அரங்க மற்றும் கட்புல கலைகளில் **(பாரம்பரிய இசை,பாரம்பரிய நடனம் மற்றும் ஓவியம்**) **பட்டப் படிப்பிற்கான புலமைப் பரிசில்களுக்காக** இலங்கை மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரிகளுக்கு கலாசார உறவுகளுக்கான இந்திய சபையினால் **ஒரு வருட** புலமைப்பரிசில் வழங்கப்படும் பின்னர் பெறுபேறுகளின் அடிப்படையில் **மூன்று வருடம் வரை நீடிக்கமுடியும்.**

3. **தகைமைகள் -**
   விண்ணப்பதாரி கொண்டிருக்கவேண்டியவை:
   i. 18 வயது முதல் 30 வயது வரை
   ii. விண்ணப்பிக்கும் பாடநெறியில் “B” சித்தி உட்பட க.பொ.த உயர் தரத்தில் மூன்று சித்திகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.(உதாரணமாக நடனம்,ஓவியம் அல்லது இசை)

iii. க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர் தரத்தில் ஆங்கில பாடத்தில் குறைந்தது ஒரு சாதாரண சித்தியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பப் படிவங்கள் மற்றும் விதிமுறைகளை பின்வரும் இடங்களிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்:
   i. சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம், 16/2 கிரகரிஸ் வீதி ,கொழும்பு - 07.
   ii. கண்டி உதவி உயர் ஸ்தானிகராலயம் : 31 ராஜபிலா மாவத்த, கண்டி
   iii. ஹம்பாந்தோட்டை/ இந்திய துணைத் தூதரக அலுவலகம் , ஹம்பாந்தோட்டை : 107-பி நியூ ரோட், ஹம்பாந்தோட்டை - 82000
   iv. யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரக அலுவலகம்: இலக்கம் 14, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

5. ஆர்வமுடைய விண்ணப்பதாரிகள் நிரப்பப்பட்ட விண்ணப்ப படிவங்களை மேலே குறிப்பிட்ட எந்தவொரு அலுவலகத்திலும் சமர்ப்பிக்க முடியும். கொழும்பில் உள்ள சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தில் 2019 டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் காலை 10.00 மணி முதல் மாலை 04.30 மணி வரை சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பதாரிகள் தமது சான்றிதழ்கள் ஆவணங்களின் மூலப்பிரதிகளுடன் நேரில் சமூகமளிக்கவேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு சுவாமி விவேகானந்த கலாசார நிலையத்தை 2684698 என்ற தொலைபேசி இலக்கத்தில் அல்லது iccrcolombo2@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

**மு.கு.** உங்களின் தினசரி/வாராந்த பத்திரிகைகளில் இந்த ஊடக அறிக்கையை பிரசுரம் செய்யவும்.